# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - IV

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மாசி -29 | 12-03-2004 | வெள்ளிக்கிழமை | ஓசை -023

நோக்கிற்குள் கூடுவிப் பெற்றுக் கொள்ள
பொற்காலம் வண்ணக் கலையகம்
MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ படிப்பிடிப்பு சேவைகள்,
கணினி முறை வீடியோ மிக்சிங்
பாடல் பதிவுகள்
படம் பிறேம் செய்தல்.
அனைத்திற்கும் பொற்காலம்
வண்ணக்கலையகம்,
யாழ் சாலை,
கிளிநொச்சி.
(சி-8689)
R.V
பந்தல் சேவை,
தர்மபுரம்.

# கருணாவுடன் தொடர்புகளைத் துண்டித்து

# நோர்வே அரசும், கண்காணிப்புக்குழுவும்

# யதார்த்தத்தினைப் புரிந்து செயற்பட்டுள்ளன!

## அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்

**நாங்கள் வேண்டுகோள் விடுப்பதற்கு முன்பதாகவே நோர்வேத் தரப்பும் கண்காணிப்புக்குழுவும் தங்களது நிலைப்பாட்டினை எடுத்துள்ளார்கள். அதாவது கருணா தற்பொழுது இருக்கின்ற பிரதேசத்துடனான தொடர்பினை துண்டித்திருக்கிறார்கள். அத்துடன் அவர்களோடு எந்தத் தொடர்புகளையும் ஏற்படுத்தாமல் அவர்கள் தவிர்த்திருக்கிறார்கள். இவ்வாறு நேற்று நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சூல்ஹெய்முடனான சந்திப்பின் பின் செய்தியாளர்களிடம் பேசிய அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.**

கிளிநொச்சியில் நேற்றுக் காலை விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களின் தலைமையிலான குழுவினரை நோர்வே விசேட தூதுவர் எரிக் சூல்ஹெய்ம் தலைமையிலான (IIIஆம் பக்கம் பார்க்க)



# பேச்சுவார்த்தை, தேர்தல், அபிவிருத்தி; புலிகளுடனான சந்திப்பில் ஆராய்ந்தோம்!

## ஜேர்மன் தூதுவர் தெரிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

யுத்த நிறுத்தத்தைத் தொடர்ந்து கடைப்பிடிப்பது பற்றியும், சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது பற்றியும் வர இருக்கும் பொதுத் தேர்தல் பற்றியும், ஜேர்மன் நிதி உதவியுடனான அபிவிருத்திகள் குறித்தும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினோம் என இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் ஜெக்குவர் எலியாஸ் தெரிவித்தார்.

நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்த ஜேர்மன் தூதுவர் தலைமையிலான குழுவினர் (IVஆம் பக்கம் பார்க்க)



# தேசத்தை தாரைவார்க்காது சமாதானப் பேச்சுவார்த்தை

## தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டில் சந்திரிகா

தேசத்தைத் தாரைவார்க்காது சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்கொண்டு செல்லப்போவதாக சனாதிபதி தெரிவித்துள்ளார். இந்தச் சமாதானப் பேச்சுவார்த்தைகள் அனைத்துத் தரப்பும் தெரிந்து கொள்ளும் வகையில் நடத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சனாதிபதி இந்தக் கருத்துக்களை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டு நிகழ்வில் தெரிவித்துள்ளார். சனாதிபதி இந்த நிகழ்விற்கு நேரடியாகச் சமுகமளிக்கவில்லை. எனினும் அவருடைய உரை பதிவு செய்யப்பட்ட ஒளிநாடாவே நிகழ்வின்போது காண்பிக்கப்பட்டது. இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் (IVஆம் பக்கம் பார்க்க)

# மட்டு. அம்பாறையை நிர்வாக ஒழுங்கிற்குள்

# கொண்டுவர எம்மிடம் பல திட்டங்களுண்டு

## மட்டு. அம்பாறை விசேட தளபதி ரமேஸ்

மட்டு. அம்பாறை மாவட்ட நிர்வாகங்களை சரியான கட்டுக்கோப்புக்குள் கொண்டு வர எங்களிடம் பல வகையான திட்டங்கள் உள்ளன. அங்குள்ள மக்களுக்கோ போராளிகளுக்கோ எதுவித பிரச்சினையும் வராது விரைவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவோம் என மட்டு. அம்பாறை மாவட்ட விசேட தளபதி ரமேஸ் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்;

*கேள்வி:- மட்டக்களப்பு-அம்பாறை பிரதேசத்தில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள இடங்களில் இயங்கி வந்த காவல்துறை, நீதிநிர்வாக அமைப்புக்கள் எல்லாம் செயலிழந்து போய்விட்டன என்று சொல்லப்படுகின்றது. அது தொடர்பாக உங்களுடைய கருத்து?*

மட்டு- அம்பாறை மாவட்டத் தளபதியாக இருந்த கருணா (IVஆம் பக்கம் பார்க்க)

# நோர்வேக் குழு நேற்று தமிழினியைச் சந்தித்தது

(அலுவலக செய்தியாளர்)

நோர்வே விசேட தூதுவர் எரிக் சூல் ஹெய்ம் தலைமையிலான குழுவினர் நேற்றுக் காலை கிளிநொச்சியில் தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி தலைமையிலான குழுவினரைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினர். இச்சந்திப்பின்போது வடக்கு-கிழக்கில் பெண்களுக்காக மேற்கொள் (IVஆம் பக்கம் பார்க்க)



# தமிழ் மக்களுக்கு வழிகாட்டக்கூடிய விடிவெள்ளி தேசியத்தலைவர் பிரபாகரனே!

## திருமலை வாழ் மட்டு. மக்கள்

தமிழ் பேசும் மக்களுக்கு வழிகாட்டக் கூடிய ஒரு விடிவெள்ளியாக நம்பிக்கை நட்சத்திரமாகத் தோன்றியுள்ள ஒரே தலைவர் பிரபாகரன் ஆகும். அவருடைய தலைமையில் நாம் வென்றடைய வேண்டிய உரிமையை குழிதோண்டிப் புதைக்க முயலும் இந்தச் சதிக்கு நாம் விலைபோகாதிருக்க உறுதி கொள்வோமாக.

இவ்வாறு திருகோணமலை வாழ் மட்டக்களப்பு மக்கள் சார்பில் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது; தமிழ் பேசும் மக்களின் பிரச்சினை கூர்மையடைந்து ஆயுதப் போராட்ட நிலைமை தோன்றுவதற்கு முன்னரே அறப்போராட்ட காலத்திலேயே எம்மிடம் வடக்கு கிழக்கு என்கின்ற பேதம் ஒரு போதும் இருந்ததில்லை. காலத்துக்கு காலம் இயற்கை (IVஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**வேந்தன் பல்கட்டும் நிலையம் கிளிநொச்சி**

பல்கட்டுதல், மிதப்பு பற்களுக்கு கிளிப் போடுதல் என்பவற்றை சிறந்த முறையில் செய்து கொள்ள மத்திய கல்லூரி மைதானம் முன்பாக வேந்தன் பல்கட்டும் நிலையம், யாழ். கண்டி சாலை, ஆனந்தபுரம். (சி.9319)

## A/L இந்துநாகரிகம்

2004 பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு கிளி.உயர் கல்வி நிலையத்தில் புதிய தகவலுடன் வினாவிடை வகுப்பு சனி5 ஞாயிறு 7 ஆகிய நேரத்தில் திரு.K.கனைக்ஸ் B.A(Hons) விளக்க வகுப்பு நடைபெறுகிறது. (G.A.Q). புதிய பிரிவு சனி3ஆரம்பம். நிர்வாகி. (4310)

# புலிகளே தமிழரின் ஏகபிரதிநிதிகள் என்பதை சர்வதேச சமூகத்திற்கு தெளிவாக்குக!

## -கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வேண்டுகோள்

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதை சர்வதேச சமூகத்திற்கு தெளிவாக எடுத்துக் காட்டும் வகையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள ஒன்பது தேர்தல் தொகுதியிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளையே தெரிவுசெய்வது தமிழ் மக்களின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கடமையாகும் என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் உள்ள மக்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களையே தெரிவுசெய்வர் என்பது நிச்சயம் என்று அவர் தெரிவித்தார்.

முழுமையான தேர்தல் பிரச்சாரத்தைச் செய்வதற்கு முழுமையான கால அவகாசம் கிடையாது என்று அவர் கூறியுள்ளார்.

வேட்பாளர்களின் தனிப்பட்ட அரசியல் பிரச்சாரத்தை எதிர்பார்க்காமல் தமிழ் மக்கள் அனைவரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கடப்பாட்டை நிறைவேற்ற வேண்டும் என கஜேந்திரகுமார் கேட்டுக்கொண்டார்.

### வலயக் கட்டமைப்பு தெரிவு

வவுனியா தெற்கு முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தின் நடப்பு வருடத்திற்கான வலயக் கட்டமைப்பின் நிர்வாக உத்தியோகத்தர்கள் தெரிவு நாளை சனிக்கிழமை காலை 9:30 மணியளவில் வவுனியா அத்தானந்தா இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

வவுனியா தெற்கு வலய சகல முன் பள்ளிகளின் நிர்வாக உறுப் பினர்களும் தவறாமல் இத் தெரிவில் பங்கேற்குமாறு வேண்டப்பட்டுள்ளனர்.

# மூதூர் பி.செ.பி. எல்லை மீள்நிர்ணயம் தேர்தலுக்கு பின்பே மேற்கொள்ள வேண்டும்

## - சனாதிபதிக்கு இரா.சம்பந்தன் கடிதம்

(திருகோணமலை)

தற்போதைய மூதூர்ப் பிரதேச செயலர் பிரிவின் எல்லைகளை மீள நிர்ணயிப்பது தொடர்பான அலுவல்கள் பொதுத் தேர்தல் முடிவடைந்த பின்னரே மேற்கொள்ளப்பட வேண்டும் என்று திருகோணமலை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளருமான இரா.சம்பந்தன் சனாதிபதிக்கு அனுப்பிய அவசரக்கடிதத்தில் கேட்டுள்ளார்.

அக்கடிதத்தில் சம்பந்தன் தெரிவித்திருப்பதாவது,

"திருமலை மாவட்டத்தில் தோப்பூரில் புதிய பிரதேச செயலர் பிரிவு ஒன்றை உருவாக்குவது என்ற முன்மொழிவு தொடர்பாக நடந்தகூட்டம் ஒன்றில் சனாதிபதியும் கலந்துகொண்டதாக படத்துடன் கூடிய செய்தி ஒன்று ஊடகம் ஒன்றில் வெளியானது.

மூதூர்ப்பிரதேச செயலர் பிரிவில் தற்போது தோப்பூர் வருகிறது. மூதூரின் கிழக்கு மற்றும் மேற்குப் புறங்களிலும், தோப்பூரின் கிழக்கு மற்றும் மேற்குப் புறங்களிலும் தமிழ்க் கிராமங்கள் தொடராக இருக்கின்றன.

தற்போதுள்ள பிரதேச செயலர் பிரிவின் எல்லையை ஒரு பிரிவினரின் நலன்களுக்காக மீள்நிர்ணயம் செய்வது ஏனையவர்களின் சட்டபூர்வமான நலன்களைப் பாதிப்பதாக அமையும். அவ்வாறான நடவடிக்கை எடுக்கப்படக்கூடாது என்பதை ஏற்றுக்கொள்வீர்கள்.

இது விடயமாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

திருமலை மாவட்டத்தில் எல்லா சமூகங்களும் சம்பந்தப்பட்ட ஒருவிடயம் குறித்து ஒரு தரப்பினரின் பிரதிநிதிகள் பங்குபற்றிய கூட்டம் ஒன்று சனாதிபதியுடன் பொதுத்தேர்தல் காலத்தில் நடத்தப்பட்டது குறித்து நான் ஆச்சரியப்படுகிறேன். எடுக்கப்படும் முடிவு எல்லா சமூகங்களுக்கும் நியாயமானதாக இருக்க வேண்டும். இது விடயமாக அவசரப்பட்டு நடவடிக்கை எடுப்பதை நான் வன்மையாக ஆட்சேபிக்கிறேன்.

இது விடயத்தில் எனதும் ஏனைய பிரதிநிதிகளுடைய கருத்துக்கள் நிச்சயமாகக் கேட்கப்பட வேண்டும்.

தற்போதைய மூதூர்ப் பிரதேச செயலர் பிரிவின் எல்லைகளை மீள் நிர்ணயம் செய்வது பொதுத் தேர்தல் முடிந்த பின்னரே கவனத்துக்கு எடுக்கப்பட வேண்டும்"-என்று சம்பந்தன் சனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் கேட்டுள்ளார். கடிதத்தின் பிரதி உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (25)

# கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டு மண்டபத் திறப்பு விழா

சமூக அபிவிருத்தி அமைச்சு நிதியின் மூலம் கட்டப்பட்ட இம்மண்டபம் 2004.03.12ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு திறந்து வைக்கப்படும்.

இடம்:- சாலை சந்தி அருகாமை,கிளிநொச்சி.

தலைவர்:- திரு.தி.இராசநாயகம், அரசாங்க அதிபர்.
தலைவர்,கலைபண்பாட்டுக் குழு, கிளிநொச்சி.

பிரதம விருந்தினர்:- திரு.எம்.வாமதேவன் செயலாளர்,சமூக அபிவிருத்தி அமைச்சு.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இம்மண்டபம் எமது மாவட்ட மக்களது பொதுநிகழ்வுகட்கும், தனிப்பட்ட கலை பண்பாட்டு நிகழ்வுகட்கும் ஒதுக்கிக் கொடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

**தி.இராசநாயகம்,**
**அரசாங்க அதிபர்,**
**கிளிநொச்சி மாவட்டம்.**

(சி.9[illegible])

# கிழக்கு நிலை குறித்து பொறுமையை கடைப்பிடிக்க திலக் கோரிக்கை

(திருமலை)

கிழக்கு மாகாண நிலைமை தொடர்பில் பொறுமையைக் கடைப்பிடிக்குமாறு, திருகோணமலை மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக் கேட்டுள்ளார்.

இந்த வேண்டுகோளை திருகோணமலைக்கு திரும்பியுள்ள கிழக்குப் பல்கலைக் கழக மாணவர் களுக்கு விடுத்துள்ளார். நேற்று முன்தினம் இரவு திலக் இம் மாணவர் களைச் சந்தித்தார்.

சிலர் மேற்கொள்ளும் நடவடிக்கையை கவனத்திற்கொள்ளாது மாணவர்கள் விரைவில் சென்று தமது கல்வியை கிழக்கு பல்கலைக்கழகத்தில் தொடர வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். எதிர்வரும் பொதுத் தேர்தல், தமிழ் மக்களை பொறுத்த வரையில் இடைக்கால நிர்வாகத்துக்கான ஒரு சர்வசன வாக்கெடுப்பாகும். இந்தத் தேர்தலில் வீட்டு சின்னத்துக்கு வாக்களிப்பதன் மூலம் மாவட்டத்தில் இருந்து மூன்று உறுப்பினர்களையாவது நாடாளுமன்றம் அனுப்பவேண்டும் என அவர் கோரிக்கை விடுத்தார். (32)

# தமிழ்த் தேசியம் என்று ஒன்று இல்லை அது வெறும் பூச்சாண்டியே

## -டக்ளஸ் தேவானந்தா கூறுகிறார்

"தமிழ்த் தேசியம்" என்று ஒன்று இல்லை என்கிறார் ஈ.பி.டி.பி.யின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா. நேற்றுமுன்தினம் யாழ். ஸ்ரீதர் திரையரங்கில் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபன வெளியீடும் பத்திரிகையாளர் மாநாடும் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பத்திரிகை யாளருடன் உரையாடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். "தமிழ்த் தேசியம்" என்று பூச்சாண்டி காட்டியே சிலர் வாக்குக் கேட்டு வருகின்றனர் எனத் தெரிவித்த அவர் குடாநாட்டுப் பத்திரிகையாளர்கள் பக்கச்சார்பான நிலைப்பாட்டைக் கடைப்பிடித்து வருவதாகவும் குற்றஞ் சாட்டியுள்ளார். (27)

# துயர் பகிர்கின்றோம்

எமது பணியாளர்களான செல்வி ச.பா[illegible]சாந்தாவின் அன்னை சண்முகநாதன். வள்ளிநாயகி, செல்வி கோ.சிவானந்தியின் அன்னை கோவிந்தன். இராசம்மா ஆகியோரின் குடும்பத்தினருக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு ஆத்மா சாந்திக்காக கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

**பணிப்பாளர், பணியாளர்கள்,**
**டா. பொன்னம்பலம் ஞாபகார்த்த**
**மருத்துவமனை**
**புதுக்குடியிருப்பு-கிளிநொச்சி.**

(4311)

## தொலைத் தொடர்பு நிலையங்களில் பணியாற்ற



# பணியாளர் தேவை

புதுக்குடியிருப்பு, விசுவமடு, கிளிநொச்சி, மல்லாவி போன்ற இடங்களில் தொலைத்தொடர்பு நிலையங்களில் பணியாற்ற பின்வரும் பதவிகளுக்கான பணியாளர்கள் (இருபாலாரும்) தேவை.

### 01. கணக்குப்பதிவாளர்

தகைமை: க.பொ.த.உயர்தரத்தில் வர்த்தக பிரிவில் கணக்கியல் உட்பட மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

### 02. தொலைபேசி இயக்குநர்

தகைமை: க.பொ.த.சாதாரண தரத்தில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (முன்னனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.)



### 03. அலுவலக உதவியாளர்
### 04. சிற்றூழியர்

வயதெல்லை:- 18-45இற்குட்பட்ட ஆண்கள்

மேற்படி பணிக்கு தகுதியுடையவர்கள் எதிர்வரும் 15.03.2004 ஆம் நாள் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு தொலைத்தொடர்பு ஒழுங்கு படுத்தல் பிரிவு, ஈழநாதம் பணிமனை அருகாமை, கிளிநொச்சி என்ற முகவரிக்கு நேரடியாக தொடர்பு கொள்ளவும்.

(சி-9330)

# நோர்வே...

நோர்வேக் குழுவினர் சந்தித்துப் பேசினர்.

காலை 11. 00 மணியிலிருந்து சுமார் இரண்டு மணி நேரம் நடந்த சந்திப்பில், விடுதலைப்புலிகள் தரப்பில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மட்டு-அம்பாறை மாவட்டவிசேட தளபதி ரமேஸ், விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் கரிகாலன், மட்டு-அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் ஆகியோரும் நோர்வே தரப்பில் விசேட தூதுவர் எரிக்சூல் ஹெய்ம்,நோர்வே தூதுவர் ஹான்ஸ்பிரஸ்கார். ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்புக் குறித்து நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் வழங்கிய பதில்கள் வருமாறு;

□ ***நோர்வேயின் விசேட தூதுவருடனான சந்திப்புக் குறித்து தெரிவிக்கமுடியுமா?***

நோர்வேயின் விசேட தூதுவர் இலங்கைக்கான நோர்வே தூதுவர் அடங்கிய குழுவினருடனான சந்திப்பானது ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தது. அந்த அடிப்படையிலேயே இச்சந்திப்பு இடம்பெற்றது.

ஆனால் இன்று சூழ்நிலையில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்ற நிலைமையில் குறிப்பாக அம்பாறை-மட்டக்களப்புமாவட்டத்திலே ஏற்பட்ட நிலைமைகள் தொடர்பாகவும் விசேடமாகக் கலந்துரையாடினார்கள். அவர்களுக்கு எங்களுடைய மட்டு-அம்பாறை மாவட்ட விசேட தளபதி அவர்கள் அங்குள்ள நிலைமைகள், நிலைப்பாடுகள் சம்பந்தமாக விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துக் கூறியிருக்கின்றார். எமது தலைமைப்பீடத்தினது நிலைப்பாடுகளையும், தீர்மானங்களையும் அவர்களுக்கு விளக்கியிருக்கின்றோம். ஆகவே இது ஒரு வழமையான சந்திப்பாக இருந்தாலும் விசேடமாக மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட நிலைப்பாடுகளையும் கலந்துரையாடியது சிறப்பம்சமாக இருந்தது.

□ ***இந்தச் சந்திப்பின்போது நோர்வே தூதுவரிடம் நீங்கள் கருணாவைப்பற்றி ஏதேனும் வேண்டுகோள் விடுத்திருக்கிறீர்களா?***

நாங்கள் வேண்டுகோள் விடுப்பதற்கு முன்பதாகவே நோர்வேத் தரப்பும் கண்காணிப்புக்குழுவும் தங்களது நிலைப்பாட்டினை எடுத்துள்ளார்கள். அதாவது கருணா தற்பொழுது இருக்கின்ற பிரதேசத்துடனான தொடர்பினை துண்டித்திருக்கிறார்கள். அத்துடன் அவர்களோடு எந்தத் தொடர்புகளையும் ஏற்படுத்தாமல் அவர்கள் தவிர்த்திருக்கிறார்கள்.

அந்தவகையில் நோர்வே யதார்த்தத்தினை உணர்ந்து எமது தலைமைப்பீடத்தின் முடிவுகளை தெளிவாகப் புரிந்துகொண்டு நாங்கள் வேண்டுகோள்களை முன்வைக்க முன்பே அவர்கள் சரியான நிலைப்பாட்டினை எடுத்திருக்கிறார்கள். அந்தவகையிலே நாங்கள் அவர்களுக்கு எங்களுடைய நிலைப்பாடுகளையும் தெளிவுபடுத்தியிருக்கின்றோம்.

□ ***நோர்வேத்தூதுவர் மூன்று விடயங்கள் பற்றி உங்களுடன் பேசப்பட்டதாகக் கூறியிருக்கின்றார் இந்த விடயங்களில் என்ன தீர்மானம் மேற்கொண்டிருக்கின்றீர்கள்?***

முக்கியமாக மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களிலுள்ள நிலைப்பாடுகளை தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கின்றோம். ஒன்று, இரண்டாவது தேர்தல் நடைமுறைகள் சம்பந்தமாக வரும் தேர்தலில் எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழுகின்ற மக்கள் சுதந்திரமாகச் சென்று தாங்களுடைய வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கான சூழலைத் தோற்று விக்கவேண்டும், இந்த சமாதான சூழலில் இந்த மக்களின் அபிலாசைகளை வெளிப்படுத்தக்கூடிய சூழலை உருவாக்குவதன் அவசியம் சம்பந்தமாக நாங்கள் வலியுறுத்தினோம். இதில் சர்வதேச சமூகம் கூடிய கரிசனையோடு இருப்பதாக அவர்கள் எங்களுக்குத் தெரிவித்தார்கள். அந்த வகையில் தங்களின் முயற்சிகள் தொடரும் என்றும் இந்தப்பகுதியில் வாழுகின்ற மக்களும் இதில் பங்குபற்றக் கூடிய சூழ்நிலையை தோற்றுவிப்பதில் தாங்கள் முழுமுயற்சி எடுப்பதாகவும் சம்பந்தப்பட்டவர்களுடன் பேசி சாத்தியப்பாடான சூழலைத் தோற்றுவிப்பதாகவும் எங்களுக்கு உறுதியளித்திருக்கின்றார்கள். மூன்றாவது எங்களது தாயகப் பிரதேசத்திலே அவசர மனிதாபிமானப் பணிகளை முன்னெடுப்பதற்கான வாய்ப்புக்கள் சம்பந்தமாகவும், அதன் தேவைகள் சம்பந்தமாகவும் ஏற்கனவே நாங்கள் பல தடவை வலியுறுத்தியிருக்கின்றோம். அந்த விடயங்கள் சம்பந்தமாகவும் நாங்கள் விரிவாக ஆராய்ந்தோம், அதற்குரிய ஒரு சூழலைத் தோற்றுவிப்பதற்கு சர்வதேச சமூகத்தினுடைய ஆதரவை, உதவிகளை விரைவாக வடக்கு-கிழக்கு தமிழர் தாயகப்பகுதியிலே உதவிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான நிலைமைகள் சம்பந்தமாக நாங்கள் விரிவாக ஆராய்ந்தோம். தொடர்ச்சியாக அது சம்பந்தமான பேச்சுக்களிலும் முயற்சிகளிலும் ஈடுபட இரண்டு தரப்பினரும் இணக்கப்பாடு கண்டிருக்கின்றோம்.

□ ***தேர்தல் தொடர்பாக என்ன விடயம் பேசி முடிவு கண்டிருக்கின்றீர்கள்?***

தேர்தல் தொடர்பாக விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரையில் எங்களுடைய தலைமைப்பீடம் தெளிவான முடிவை எடுத்திருக்கின்றது. எங்களுடை மக்கள் சுதந்திரமாகச் சென்று வாக்களிக்கக்கூடியவகையில் எந்த ஏற்பாடுகளை முன்வைத்தாலும் அதற்கு எங்களுடைய முழுஆதரவையும் ஒத்துழைப்பினையும் தர தாங்கள் தயாராக இருக்கின்றோம். அதாவது சூனியப் பிரதேசமாக இருந்தாலும் சரிதான், எமது காவலரண் பகுதியாக இருந்தாலும் இராணுவக் காவலரண் பகுதியாக இருந்தால் என்ன எந்தப் பகுதிகளுக்குள்ளும் இந்த வாக்களிப்பு நிலையங்களை அமைப்பதற்கு அதற்கான விதிமுறைகளை பேணுவதற்கும், அதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கும் முழு அளவிலான ஒத்துழைப்பினையும், ஆதரவினையும், பங்களிப்பினையும் செலுத்துவோம் என்பதை நாங்கள் உறுதியளித்திருக்கின்றோம். ஆகவே தொடர்ச்சியாக அவர்கள் சம்பந்தப்பட்டவர்களுடன்இது பற்றிப் பேசி சாத்தியப்பாடான நிலைமையினை தோற்றுவிப்பதாக எங்களுக்கு உறுதியளித்திருக்கின்றார்கள்.

□ ***விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வாக்காளர்கள் , இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் செல்லும் பொழுது இராணுவத்தினர் தாங்கள் சோதனையிடமாட்டோம் என வடக்குப் பிராந்தியத் தளபதி அறிவித்திருக் கின்றார்கள். இதுதொடர்பாக உங்களுக்கு ஏதேனும் உறுதிப்படுத்தப்பட்ட அல்லது உறுதி மொழியேனும் வழங்கப்பட்டுள்ளதா?***

அது பற்றி அதிகார பூர்வமான நிலைப்பாடுகள் எங்களுக்குத் தெரியப்படுத்தப்படவில்லை. ஆனால் நாங்கள் அதைத் தெளிவுபடுத்தினோம். அதாவது அன்றைய நாளில் பல்லாயிரக்கணக்கான மக்கள் சென்று வாக்களிக்க வேண்டுமாக இருந்தால் அங்கே வழமை போன்று பரிசோதனை செய்து மக்களை ஒழுங்குபடுத்துவதென்பது சாத்தியப்பாடற்றதொன்றாகும்.

ஏனெனில் அவர்கள் பரிசோதிக்கப்பட்டு விடுவதாகவிருந்தால் குறிப்பிட்ட எண்ணிக்கையானோர்தான் வாக்களிப்புக்கு செல்லக்கூடிய சூழ்நிலை இருக்குமே தவிர பல்லாயிரக்கணக்கான மக்கள் சென்று ஒரே நாளில் பரிசோதனைகளை முடித்துச் செல்வதென்பது சாத்தியமற்றது. அப்படியான ஒரு செயற்பாட்டினை செய்வதற்காக இருந்தால் நிச்சயமாக மக்களை அந்த வாக்களிக்கும் நடவடிக்கைகளிலிருந்து தடுக்கும் நோக்குடனே அப்படியான காரியங்களைச் செய்யலாம். அது முற்றாக அந்த மக்களுடைய உரிமையை மறுக்கின்ற, மனித உரிமைகள் மீறுகின்ற செயலாகக் கருதப்படும் என்பதை நாங்கள் இவர்களுக்கு வலியுறுத்தினோம். ஆகவே அன்றைய நாளில் இராணுவத் தரப்பு இப்படியான ஒரு சதகமான முடிவுகளை எடுத்து இந்த மக்கள் தங்களது அபிலாசைகளை, உரிமைகளை வெளிப்படுத்துவதும் பயன்படுத்துவதற்கான சூழலை தோற்றுவிக்க வேண்டும் என்பதை நாங்கள் வலியுறுத்தியிருக்கின்றோம்.

இது சம்பந்தமாக நோர்வேத் தரப்போடு நாங்கள் கலந்துரையாடியது எங்களுக்கு ஆக்கபூர்வமான கருத்துப்பரிமாற்றமாகவிருந்தது. தொடர்ந்தும் நாங்கள் சம்பந்தப்பட்ட பலரோடு சந்தித்து இது சம்பந்தமான முயற்சிகளை நடாத்தியிருக்கின்றோம்.

□ ***மட்டக்களப்பு-அம்பாறையில் இப்பொழுது நிலைமை எப்படியிருக்கின்றது? இந்தப் பிரச்சினையின் தார்ப்பரியம் என்ன என்பதனை எங்களுக்குத் தெளிவுபடுத்த முடியுமா?***

தற்பொழுது கருணா என்கின்ற ஒரு குற்றவாளி பல குற்றங்களைப் புரிந்து எமது அமைப்பினது கட்டுப்பாடுகளை மீறி அதாவது தன்னுடைய அடியாட்களை வைத்து மக்களைத் துன்புறுத்துகிற பல நடவடிக்கைகளில் ஈடுபட்டு பல குழப்பங்களை ஏற்படுத்துகிறார் கருணா என்கின்ற தனி மனிதனுடைய செயற்பாடுகள் ஊடகங்களுடாக பெரிதுபடுத்தப்பட்டது உண்மை. மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டத்திலும் ஒருசில அவரினுடைய அடியாட்களை வைத்துக்கொண்டு அங்கே மக்கள் மத்தியிலே குழப்பங்களை ஏற்படுத்தி பல பிரச்சினைகளை உருவாக்கியது தெரிந்ததே.

தற்பொழுது இவை ஓரளவு குறைந்து இன்றைக்கு கருணாவினுடைய மோசமான நடவடிக்கைகள் எல்லாமே மக்கள் மத்தியிலே வெளிப்பட்டுக்கொண்டிருக்கின்றது. இந்நிலையில் மக்கள் இன்று தெளிவடைந்துகொண்டு இருக்கிறார்கள். எங்களுடைய மக்களைப் பொறுத்தவரையில், தமிழர் தாயகத்திலே வாழுகின்ற அனைத்து மக்களும் எமது தேசியத்தலைவர் மீதும், எமது இலட்சியத்தின் மீதும், தேசிய ஒருமைப்பாட்டின் மீதும், மிகுந்த பற்றுடையவராக இருக்கின்றார்கள். இதை எவராலும் சீர்குலைக்க முடியாது. அது கடந்த காலங்களிலே வரலாற்றிலே கற்றுக்கொண்ட உண்மை. குறிப்பாக மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்திலே இந்த கருணா இன்று கிளப்பியிருக்கின்ற பிரதேசவாத உணர்வுகள் அங்கே பெரிதாக எடுபட்டதாகத் தெரியவில்லை. ஏனெனில் அந்த மக்கள் அதாவது மிகக் குறுகியகாலத்திலே அங்கு பொங்குதமிழ் நிகழ்விலே தேசியத் தலைவர் மீதும், எமது இலட்சியத்தின் மீதும் ஒன்றுபட்டு மக்கள் தங்கள் பற்றுறுதியை விசுவாசத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இந்த நிலையில் கருணாவுடைய தனிமனித வெறியாட்டத்திற்கு அந்தமக்கள் நிச்சயமாகப் பலியாகமாட்டார்கள் என்பதனை நாங்கள் உறுதியாக நம்புகின்றோம். அதற்கான சாட்சியங்களாக அங்கே கருணா தனது பலமாகக் காட்டிய போராளிகள், தளபதிகள் பொறுப்பாளர்களில் இருந்து பெருந்தொகையான போராளிகளை வழிநடத்திய அனைத்துத் தளபதிகளும் பொறுப்பாளர்களும் இங்கே தலைமைப்பீடத்திடம் வந்து கருணாவினது நிலைப்பாடுகள் சம்பந்தமாகவும், அவருடைய அத்துமீறல்கள், குற்றச்சாட்டுக்கள், நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் மிகத் தெளிவாகவும் ஆதார பூர்வமாகவும் முன்வைத்திருக்கிறார்கள். அந்தவகையில் அவரினுடைய அந்த செயற்பாடுகள் ஒரு செயலிழந்த நிலைக்கு போய்க்கொண்டிருக்கின்றது. மக்களும் அதைப்புரிந்து கொண்டு உணர்ந்து கொண்டு தெளிவுபட்டுக்கொண்டிருப்பதை நாங்கள் அண்மை நடவடிக்கைகளுடாக நாங்கள் அதைப் புரிந்து கொள்கிறோம், எமது தலைமைப் பீடத்தினால் நியமிக்கப்பட்ட மட்டு அம்பாறை மாவட்ட நிர்வாகக்கட்டமைப்பு மிக விரைவில் அங்குசென்று நிலைமைகளை பூரண கட்டுப்பாட்டில் கொண்டுவரும் என்று நாங்கள் முழுமையாக நம்புகின்றோம்.

□ ***விடுதலைப்புலிகளின் தலைமை அவரை பதவியிலிருந்து நீக்கியிருக்கின்றது. இந்த நிலையில் அவருக்குப் பொது மன்னிப்பும் வழங்கப்பட்டிருக்கின்றது அந்த பொது மன்னிப்பினை அவர் ஏற்க மாட்டேன் என்று மறுத்திருக்கின்றார். அப்படியானால் தலைமைப்பீடம் அவருக்கெதிராக என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது?***

அவர் பொறுப்பிலிருந்து மட்டும் அவர் நீக்கப்படவில்லை, அமைப்பிலிருந்தும் அவர் நீக்கப்பட்டு விட்டார். அவர் ஒரு தனிமனிதனாக குற்றவாளியாகத்தான் அவர் இருக்கின்றார். அந்தநிலையில் அவர் இன்றைக்கு இந்த அமைப்பினுடைய எமது தலைமைப்பீடத்தினுடைய நிலைப்பாடுகளை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றதுதான பாரதூரமான குற்றச்சாட்டாகவும் பாரதூரமான விளைவையும் அவர் சந்திக்கும் சூழலுக்குத் தள்ளப்பட்டுக்கொண்டிருக்கின்றார்.

எங்களைப் பொறுத்தவரையில் எமது தேசியத் தலைவர் இந்த நிலைமைகளை அங்கே எந்தவித நெருக்கடிகளுமின்றி உயிரிழப்புக்களுமின்றி தற்பொழுது இந்த யுத்தநிறுத்த நடவடிக்கையும் சமாதான முன்னெடுப்புக்களும் மேற்கொண்டுவரும் இந்தச் சூழலை சீர்குலைக்காது மிகக்கவனமாக அங்கே நிலைமைகளைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவருவதற்கு புதிய அணுகுமுறைகளை நடைமுறைகளை அவர் ஒழுங்குபடுத்திக்கொண்டிருக்கின்றார். எங்களுடைய புதிய கட்டமைப்பு, புதிய தளபதிகள், போராளிகள் அதைமிகச் செம்மையாக மேற்கொண்டு அதை வெற்றிகரமாக முடிப்பார்கள் என்பதில் இப்பொழுது நாங்கள் நம்பிக்கையாக இருக்கின்றோம்.

கருணா நாளுக்குநாள் விடுகின்ற அவருடைய கருத்துக்கள் குழப்பமான கருத்துக்களை வைத்துக்கொண்டு நாங்கள் தற்பொழுது முடிவெடுக்க முடியாது நாங்கள் ஒரு தெளிவான நிலைப்பாட்டினை எடுப்போம். ஏனெனில் நாளாந்தம் அங்கு அவர் சிறைக்கைதியாக்கி அவரது கட்டுப்பாட்டுக்குள்ளேயே பணயக்கைதியாக்கி வைத்திருக்கின்ற போராளிகள் பெருமளவில் பலர் அவரிடமிருந்து தப்பிவந்து கொண்டிருக்கிறார்கள். அங்கேயே தற்பொழுது கருணாக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கின்றது. நாங்கள் கேள்விப்பட்டிருக்கின்றோம். பல போராளிகள் அவருக்கெதிராக வெளிக்கிட்டு அவர்களைத் துன்புறுத்தியதாகக் கேள்விப்படுகின்றோம். அவரைச் சூழ்ந்தே பெரிய ஆபத்துக்குள், பெரிய நெருக்கடிக்குள் அவர் நின்று செயற்படுவதாக கடந்தசில நாட்களில் அங்கிருந்து வந்த தளபதிகள் போராளிகள் அந்த நிலைப்பாட்டை முன்வைத்திருக்கிறார்கள்.

□ ***தலைமைப்பீடத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்டிருக்கின்ற கருணாவுக்கு இராணுவ நீதிமன்றம் போன்ற ஒரு அமைப்பின் கீழ் விசாரணை மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா?***

குற்றங்களை உறுதிசெய்த அடிப்படையில் தான் தலைமைப்பீடம் கருணாவை எமது அமைப்பிலிருந்தும் பொறுப்பிலிருந்தும் நீக்கும் தீர்மானத்தை எடுத்து அதை நடைமுறைப்படுத்தியிருக்கிறது.

□ ***இப்பொழுது இயக்கம் சம்பந்தமான சில பொறுப்புக்கள் அவரிடம் இருக்கின்றது. பல சொத்துக்கள் இருக்கின்றன அவைகுறித்து!***

நிச்சயமாக நீங்கள் குறிப்பிடுவது சரி, அப்பாவிப்போராளிகளை அவர் எங்களுடைய தலைமைப்பீடத்தினதும் எங்களது தேசியத்தலைவரின் கருத்துக்களை, தீர்மானங்களை அந்தப் போராளிகள் மத்தியிலே கொண்டுசெல்லவிடாது அறியமுடியாதவாறு பலதடைகளை அவர் ஏற்படுத்தியிருக்கின்றார். இதுஒரு சிலநாட்கள் அவருக்கு இது சாத்தியப்பாடான சூழலாக இருக்குமே தவிர தொடர்ந்தும் அது சாத்தியமாக நிச்சயமாக இருக்காது.

ஆகவே அச்சொத்துக்களையும், எங்களுடையஅப்பாவிப் போராளிகளையும் பாதுகாப்பாக எங்களுடைய தேசத்தினுடைய சொத்துக்களாக மாற்றியமைப்பதற்கு எங்களது தேசியத்தலைவரினால் நியமிக்கப்பட்ட புதியகட்டமைப்பும் புதிய நிர்வாகமும் உறுதிபூண்டிருக்கின்றது. ஆகவே மிகவிரைவில் அதை நாங்கள் கட்டுப்பாட்டுக்குள்ளும் எந்தவித பிரச்சினையுமின்றி எங்களது தேசத்தினதும் எங்களினதும் மக்களினதும் அந்த சொத்துக்களை மிகவிரைவில் பாதுகாப்பாக மீட்டெடுப்போம்.

□ ***எந்த அமைப்பெனிலும் தலைமையிடையில் பிளவு ஏற்படுகையில். கீழே உள்ள அணிகள். அங்கத்தவர்கள் அனாதையாக்கப்படும் நிலைக்குத் தள்ளப்படுவார்கள். அந்த நிலையில் அவர்கள் நிலைப்பாடு என்ன?***

எங்களது தலைமைப்பீடத்தில் பிளவு என்பது தவறான பார்வை இது தனி மனிதன் கருணா என்பவரது, அவர் செய்த குற்றங்கள், அவர் எமது அமைப்பின் கட்டுப்பாடுகள், நடைமுறை விதிமுறைகளை மீறிச்செயற்பட்டதன் காரணமாக எமது தலைமைப் பீடம் நடவடிக்கை எடுக்கின்ற கட்டத்தில் கருணா மிக தவறான குற்றச்சாட்டுக்களையும், மிக மோசமான பிரதேசவாத உணர்வுகளையும் கிழப்பி அவர் தன்னுடையபக்கம் நியாயம் தேடிக் கொள்ள முயலுகின்றார் இதன் மூலம் இதுவரை காலமாக, பல ஆண்டு காலமாக உயிர் விலைகொடுத்து எமது தேசியத் தலைவரால் கட்டியெழுப்பப்பட்ட இந்த தேசிய ஒருமைப்பாடு, எமது இலட்சியத்தின் வளர்ச்சியையும் இன்று இவர் கொச்சைப் படுத்த முயன்று கொண்டிருக்கிறார். நிச்சயமாக அங்கே இவர் ஒரு சக்தியாக பார்க்கப்படும் நிலையில் மக்களும் இல்லை எந்த ஒரு தமிழ் மக்களும் அதைஏற்றுக் கொள்ளும் நிலையில் இல்லை, போராளிகளும் அந்த நிலையில் இல்லை, ஆகவே இதை ஒரு தலைமைப் பீடத்தில் ஏற்பட்ட பிளவாகப் பார்க்கக்கூடாது தனிமனிதனுடைய, தன்னுடைய தனிப்பட்ட பலவீனங்களை, தனிப்பட்ட மோசமான நடவடிக்கை காரணமாக வந்த விளைவாகத்தான் இதை நீங்கள் பார்க்க வேண்டும்'ஆகவே கருணாவினுடைய இந்த செயற்பாட்டினை போராளிகளோ, மக்களோ அனுமதிக்க மாட்டார்கள். அங்குள்ள போராளிகள் அனாதரவாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதும் தவறானது. ஏனெனில் அந்தப் போராளிகள் தற்பொழுதும் எமது தேசியத் தலைமையையும் எங்களது போராட்டத்தையும் நேசித்து விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களாகவே அவர்கள் இருக்கிறார்கள் அவர்கள் அனாதரவானவர்கள் அல்ல கருணாஎன்கின்ற ஒரு மோசமான தேசவிரோத செயலில் ஈடுபடுகின்ற ஒரு தனிப்பட்ட நபரின் பணயக் கைதிகளாகவே இன்று அந்த போராளிகள் இருக்கிறார்கள் அவர்கள் அனாதரவானவர்கள் அல்ல. அவர்கள் எங்களது விடுதலைப்புலிகளது அமைப்பினுடைய போராளிகள் இவர்களை மிகவிரைவிலே நாங்கள் எந்த வித பாதிப்பும் ஏற்படாத வகையில் நாங்கள் மீண்டும் எமது ஒழுங்கிற்குள்எமது நடைமுறைக்குள் கொண்டு வருவோம் என்றார்.

□ ***தேசத்துரோகம் செய்பவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்படும் என்ற நியதிப்படி கருணாவும் இப்படி தேசத்துரோகம் செய்துள்ளார் என்பதனால் அவருக்கு கொடுக்கப்படும் என்பதுபற்றி?***

இவற்றை ஏற்கனவே எமது தலைமைப்பீடம் வெளிப்படுத்தியிருக்கின்றது அவர் குற்றச் செயல்களைப் புரிந்தாலும் அவருக்கான ஒரு பொது மன்னிப்பு வழங்கி அவர் பொதுவாழ்க்கையில் ஈடுபடுவதற்கான உத்தரவாதத்தை அளிப்பதற்கு எமது தேசியத்தலைவர் மனிதாபிமான ரீதியாக ஒரு நிலைப்பாட்டை எடுத்திருக்கிறார் அது சம்பந்தமாக நாங்கள் ஏற்கனவே இங்குவருகை தந்த மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அதிவணக்கத்திற்குரிய ஆயரிடமும் புத்திஜீவிகளிடமும் எடுத்து கூறியுள்ளோம்.

□ ***தற்போது கருணா பொதுமன்னிப்பினை ஏற்க மறுத்துள்ளார் அது குறித்து?***

ஏற்க மறுத்த நிலையில் எமது தலைமைப்பீடம் அதற்கேற்ற தீர்மானங்களை அதற்கேற்ற வகையில் எடுக்கும் என நம்புகின்றோம்.

□ ***கிழக்கில் யுத்த நிறுத்தமும் நடைமுறையில் இல்லை என்று கருணா அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். யுத்த நிறுத்த கண்காணிப்பாளர்களும் அங்கிருந்து விலகியுள்ளார்கள் இந்த சூழ்நிலையில் யுத்த நிறுத்தத்திற்கு விரோதமாக நடந்தால் அதற்கு பொறுப்பு நீங்களல்லவா?***

அதாவது கருணாவும் கருணாவினுடைய ஒரு சில அடியாட்களும் அப்படியான அச்சுறுத்தலை விடவாமே தவிர சிழக்கில் அப்படியான நிலைமை என்று சொல்வது தவறு ஆனால் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்தில் ஒரு பகுதிக்குள் தான் கருணாவும் கருணாவினுடைய அடியாட்களும் நின்று வெறியாட்டம் புரிந்து கொண்டிருக்கிறார்கள் அதை நாங்கள் மிகவிரைவில் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து விடுவோம் நேரத்திற்கு நேரம் விடப்படும் குழப்பமான அவரின் செய்திகளை வைத்துக் கொண்டு நாங்கள் முடிவெடுக்க முடியாது நாங்கள் நிதானமாக எங்களுடைய தலைமைப்பீடம் இதற்கு சரியான ஒழுங்கமைப்புக்களை செய்து சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு திட்டமிட்டிருக்கின்றோம் (சோ)

# இரத்தம் சிந்தப்படக்கூடாது என்பதற்காகவே மட்டு. திரும்பாது காத்து நிற்கின்றோம்!

## புலிகளின் மூத்த உறுப்பினர் கரிகாலன் தெரிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

ஒரு சொட்டு இரத்தம் கூட சிந்தாமல் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென தலைவர் உறுதியாகக் கூறியுள்ளார். இதன் காரணமாகவே மட்டு. திரும்பாது இருக்கின்றோம் என விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் கரிகாலன் தெரிவித்தார்.

நேற்று விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

★ நீங்கள் இங்கிருக்கும் பொழுது அங்குள்ள நிலைமைகளை எவ்வாறு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியும்?

எங்களுடைய தேசியத் தலைவர்தான் விடுதலைப்போராட்டத்தை ஒட்டுமொத்தமாக வழி நடத்திச் செல்கின்றார். தேசியத் தலைவர் இங்கிருந்து தான் எல்லாவற்றையும் நெறிப்படுத்திச் செயற்படுத்திக் கொண்டுள்ளார். நாங்கள் அவருக்கு பக்கத்தில் நிற்பதனால் அவருடைய ஆலோசனைகளைக் கேட்டுச் செயற்படுத்துகின்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றோம். அந்த நடவடிக்கைகளின் மூலம் ஒரு மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் எங்களுக்கு வெற்றியளித்துக் கொண்டிருக்கின்றது.

அங்குள்ள போராளிகள் எல்லாம் கருணாவைவிட்டு அகன்று கொண்டிருக்கின்றார்கள். அகல்வதற்கு முயன்று கொண்டிருக்கின்றார்கள். தேசியத் தலைவருடைய படத்தை அகற்றிய அன்றைக்கே போராளிகளெல்லாம் ஆடிப் போய்விட்டார்கள். இவ்வளவு காலமும் இந்த தேசியத் தலைவரையும், தேசியத்தையும் வலியுறுத்தி ஊட்டி வளர்த்த போராளிகள் கருணாவின் ஒரு சொல்லிற்காக ஒரு நாளில் தூக்கியெறிய தயாராகவில்லை.

இன்றைக்கும் தேசியத் தலைவரின் கீழ் அணி திரள்வதற்கு எல்லாப் போராளிகளும் தயாராக இருக்கின்றார்கள் என்ற அந்த உணர்வை நான் இறுதியாகப் பார்த்து வந்தேன் என்ற வகையிலே நான் உறுதியாக உங்களுக்குக் கூறுகின்றேன்.

★ நியமிக்கப்பட்டிருக்கும் புதிய தளபதிகளுக்கு மட்டக்களப்பு, அம்பாறை பிரதேசத்திற்கு போக முடியாமல் இருக்கின்றமை கருணா அதற்கு தடையாக, பலமாக இருக்கின்றார் என்ற காரணத்தினால்தானா?


பலமாக இருக்கின்றார் என்ற காரணத்தினால் அல்ல. தலைவருடைய எதிர்பார்ப்பை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக தலைவர் ஒரு சொட்டு இரத்தம் சிந்தாமல் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்று உறுதியாகக் கூறியுள்ளார். அதனால் நிதானமாக போராளிகளுக்கு உண்மையைத் தெளிவுபடுத்தி எங்களுடன் சேர்த்துக் கொள்வதன் மூலம் கருணாவைப் பலவீனப்படுத்தி இந்தப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காண்பதற்காகத்தான் நாங்கள் தலைவரின் பக்கத்தில் நின்று கொண்டிருக்கின்றோம் எனவும் தெரிவித்தார். (சோ)

# வவு. மடுகந்தப்பகுதியில் மனித எலும்புக்கூடு மீட்பு

## – காணாமல் போன பொலிசாரினது என சந்தேகம்

(செட்டிக்குளம்)

வவுனியா மடுகந்த பகுதியில் மனித எலும்புக் கூடு ஒன்றினை வவுனியா பொலிசார் மீட்டுள்ளனர் இவ்வாறு எலும்புக்கூடாக மீட்கப்பட்டவர் பொலிஸ் உத்தியோகத்தராக இருக்கலாம் என்று வவுனியா பொலிசார் சந்தேகிக்கின்றனர். கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் மன்னார் முருங்கன் பிரதேசத்தில் பணியாற்றி மடுகந்த பகுதியில் திருமணம் முடித்த பிரபாத் என்பவர் காணாமல் போனதாக முறையிடப்பட்டிருந்ததாகவும் இவருடைய எலும்புக்கூடாக இது இருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது மடுகந்த பகுதியில் உள்ள விமானப்படை முகாமுக்கு அருகில் இருந்து மீட்கப்பட்டுள்ள இந்த எலும்புக் கூடுடன் இராணுவத்தினர் பாவிக்கும் பாதணிகள் இரண்டும் இரண்டு காலுறைகளும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவிக்கின்றனர். இது குறித்த தீவிர விசாரணையினை மேற்கொண்டு வருவதாக வவுனியா பொலிசார் தெரிவிக்கின்றனர். (21)



ஸ்பெயினின் தலைநகரான மட்றிட்டில் புகையிரத சேவை அமைப்பின் மீது ஒரே நேரத்தில் 10 குண்டுகள் வெடித்ததில் 182பேர் பலியாகினர். 900க்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். நேற்று இடம்பெற்ற இக்குண்டு வெடிப்பில் புகையிரதம் ஒன்று சேதமடைந்திருப்பதைப் படத்தில் காணலாம்.

# வட-கிழக்கு அபிவிருத்திப் பணிகளில் ஜி.ரி.இசற் பங்களிப்பு தொடரும்

## இலங்கைக்கான பணிப்பாளர் தெரிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

வடக்கு-கிழக்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அபிவிருத்திப் பணிகளில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் பங்களிப்புத் தொடர்ந்து இருக்கும் என ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் (ஜி.ரி.இசற்) இலங்கைக்கான பணிப்பாளர் தெரிவித்தார்.

நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்த ஜேர்மன் தூதுவருடன் இவர் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பில் கலந்துகொண்டார் பின்னர் பத்திரிகையாளருடனான சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளில் வறுமைக்குறைப்பு திட்டங்களை நடைமுறைப்படுத்துவது குறித்து ஆராய்ந்து வருகிறோம். மிகவும் வறுமைப்பட்ட இடம் அதில் யார் யாருக்கு உதவுவது என்பது குறித்து அடையாளம் கண்டு உதவுவது பற்றியும் ஆராயப்படுகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (சோ)

### பேச்சு....

அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடிய பின்னர் பத்திரிகையாளர் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். இச்சந்திப்பு சமாதானச் செயலகத்தில் 10 மணிக்கு ஆரம்பமாகி சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், அரசாங்கத்திற்குமிடையிலான சமாதானப்பேச்சு வார்த்தையில் நோர்வேயின் அனுசரணையைத் தொடர்ந்து பெற்றுக்கொள்வது பற்றியும் மனம்விட்டுப் பேசினோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் அரசியல்துறைப் பொறுப்பாளர் மற்றும் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.(சோ)

# ஆனந்த சங்கரியின் துண்டுப்பிரசுரங்களை அள்ளிக் கொண்டோடிய இளைஞர்கள்

## – பிடிக்க பொலிசார் எடுத்த முயற்சி தோல்வி

சாவகச்சேரி நகரப் பகுதியில் ஆனந்த சங்கரி குழுவினரின் பெருமளவு தேர்தல் துண்டுப் பிரசுரங்களை எடுத்துச் சென்ற இளைஞர்களைப் பிடிக்கப் பொலிசார் மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில் சாவகச்சேரி நகரப் பகுதியில் பொலிஸ் பாதுகாப்புடன் வீ. ஆனந்தசங்கரி தலைமையிலான சுயேட்சைக்குழு ஆதரவாளர்கள் சிலர் துண்டுப் பிரசுரங்களை பொதுமக்களுக்கு விநியோகிக்கும் நடவடிக்கையில் நேற்று நண்பகல் ஈடுபட்டிருந்தனர். பின்னர் இவர்கள் தாம் பயணித்த காரை கண்டி வீதியோரமாக நிறுத்திவிட்டு அருகிலுள்ள உணவகத்திற்கு உணவருந்தச் சென்றுள்ளனர்.

அவ்வேளையில் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் இருவர் வாகனத்தினுள் வைக்கப்பட்டிருந்த துண்டுப் பிரசுரங்களை எடுத்துச் செல்ல முற்பட்டுள்ளனர். அப்பொழுது பாதுகாப்பு நடவடிக்கையிலிருந்த பொலிசார் துண்டுப் பிரசுரங்களைப் பறிக்க முற்பட்டுள்ளனர். ஆயினும் அத்துண்டுப் பிரசூரங்களுடன் இளைஞர்கள் இருவரும் தப்பிவிட்டனர்.

இதனிடையே சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரிப் பகுதியடியில் இது போன்று குறிப்பிட்ட குழுவினர் மாணவர்களிடையே பலாத்காரமாக துண்டுப் பிரசுரங்களை வழங்கியுள்ளனர். ஆயினும் ஏற்க மறுத்த மாணவிகள் சிலர் கூடவந்த பொலிசாரால் அச்சுறுத்தப்பட்டுள்ளனர். (27)

### தமிழ்....

அழிவுகள் ஏற்பட்ட போதும் எமக்கு உதவிய கரங் களுக்குரியவர்கள் பிரதேசம் கடந்த உணர்வுடையவர்களாகவே இருந்துள்ளனர். எமது போராட்டம் தனித்த ஒரு பிரதேசத்தை முன்வைத்து ஆரம்பிக்கப்பட்டதல்ல ஒட்டு மொத்தமாக தமிழீழ பிரதேசங்களை வென்றெடுக்கும் ஒரேநோக்கத்துடன் தான் எமது நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. அமரர்களான ராசமாணிக்கம், ராசவரோதயம் போன்ற தலைவர்கள் கட்டிக்காத்து வளர்த்த ஐக்கியத்தை தனது சுயநலத்திற்காகவும் குறுகிய நோக்கத்திற்காகவும் ராசதுரை அவர்களின் வழியில் காட்டிக் கொடுக்க முனைந்துள்ள துரோக நடவடிக்கை தற்போது நிகழ்ந்துள்ளது. இதனையிட்டு மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழ் பேசும் மக்களாகிய நாம் வெட்கித் தலை குனிகின்றோம்.

தமிழினத்துக்காக தங்களது உயிரைத் தியாகம் செய்தவர்களின் குருதிகளில் பிரதேச வாதம் இருந்ததா? தமிழ் மக்களின் இன விடுதலைக்காக தன்னுயிரைத் தியாகம் செய்த அன்னைபூபதியின் தியாக உணர்விற்கு நாம் கொடுத்துள்ள விலை இந்தப் பிரதேசவாதம் தானா?

எப்போது நாம் பிளவு படுவோம்? எப்போது எமது போராட்டம் பின்னடைவு காணும் எனக்காத்திருக்கும் பேரினவாத சக்திகளுக்கும் எம்மிடையே இருக்கும் சில குறுகிய மனப்பான்மையுடையோர்க்கும் மகிழ்ச்சி ஊட்டக் கூடிய இந்த நிலைமை உண்மையில் விடுதலையை விரும்பும் எம்போன்றோருக்கு தலைகுனிவையும் பெரும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

சர்வதேச சமூகமே எமது கோரிக்கையை நியாயமென அங்கீகரிக்கக் கூடிய ஒரு சாதகமான சூழல் உருவாகிவரும் இந்நேரத்தில் அனைத்தையும் தலைகீழாகப் புரட்டிவிடும் இந்தப் பிரதேசவாத பிளவுக்கு நாம் முகம் கொடுக்காது நமது ஐக்கியத்தை கட்டி வளர்ப்போமாக எமது போர் வரலாற்றில் வெற்றியைப் பின்னுக்கு தள்ளும் எந்தவித சதிக்கும் ஆட்படாது இருப்போமாக. எமக்கு ஏற்பட்டுள்ள இந்தத் தலைகுனிவை நிமிர வைக்க கைகோர்ப்போமாக.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (25)

### -அம்பாறை கல்முனையில்-

# இனம்தெரியாதோர் துப்பாக்கிச் சூடு இரு மாணவர்கள் படுகாயம்

அம்பாறை மாவட்டம் கல்முனையில் இனம்தெரியாதோர் நடத்திய துப்பாக்கிச் சூட்டின்போது 02 மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

நேற்றுக் காலை 6.00 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. அம்பாறை பொலிஸ் நிலையத்திற்கு இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ள கல்முனை பொலிஸ் தலைமையக இன்ஸ்பெக்டரின் இடம்மாற்றத்தை ரத்துச் செய்யுமாறு கோரி இங்கு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்ட வேளை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### மட்டு....

வினுடைய தனிப்பட்ட ஒரு பிரச்சினை காரணமாக திடீரென்றதொரு முந்தநிலை இருக்கின்றது. அனைத்து நிர்வாகங்களிலும் திடீரென்று அவருடைய செயற்பாட்டினூடாக ஒரு தாமதமே தவிர அங்கிருக்கின்ற மட்டு-அம்பாறை மாவட்ட மக்களோ சரி, அங்கிருக்கின்ற எங்களுடைய விடுதலைப் புலிகள் போராளிகளோ சரி, அவருடைய முடிவை ஏற்றுக்கொள்ளவில்லை. அவருடைய முடிவை ஏற்றுக்கொள்ளாத காரணத்தினால் தான் மட்டு- அம்பாறை மாவட்டத்தில் இருந்து அவருக்குக் கீழிருந்த அனைத்து இராணுவத்தளபதிகளும், அரசியல் பொறுப்பாளர்கள், மருத்துவப்பொறுப்பாளர்கள், எங்களுடைய இராணுவப் பயிற்சி ஆசிரியர்கள், ஏனைய மூத்த பொறுப்பாளர்கள் இங்கு வந்திருக்கிறோம்.

அவருடைய அந்த தனிப்பட்ட முடிவு சம்பந்தமாக மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டத்தில் இருக்கின்ற பொதுமக்கள் எவருக்கும் தெரியாது. அதேவேளை எந்தப் போராளியோ, தளபதிகளோ, பொறுப்பாளர்களோ அனுமதிக்கவுமில்லை எனவே இது ஒரு குறுகிய காலஆட்டமே தவிர, இதை எங்களுடைய மக்கள் நன்கு விளங்கிக்கொண்டு அவரை நிச்சயமாகத் தனிமைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். குறுகிய காலத்திற்குள் நல்ல தீர்வொன்று கிடைக்கும் என்பதை உங்களுக்கு உறுதியாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மட்டக்களப்பு -அம்பாறை மாவட்ட நிலவரங்களை நாங்கள் சரியான கட்டுக்கோப்புக்கு கொண்டு வருவதற்கு எங்களிடம் பலவகையான திட்டங்கள் இருக்கின்றன. அதாவது அங்கிருக்கின்ற பொது மக்களுக்கோ சரி, போர்வீரர்களுக்கோ சரி எந்தப் பிரச்சினையும் வராத வண்ணம் அந்த மாவட்டத்தினுடைய நிர்வாகத்தை நாங்கள் கட்டுப்பாட்டுக்குள் எடுக்கவேண்டும். ஒவ்வொரு கட்டங்களிலும் அங்கு என்ன நகர்வு இருக்கின்றதை நாங்கள் விளங்கிக் கொண்டு செயற்படுகின்றோம். ஏனென்றால் அதை நான் உறுதியாக இவ்விடத்தில் சொல்வதற்கு நம்பிக்கையாக சொல்லுவதற்குக் காரணம் என்னவென்று சொன்னால் எப்பவும் எங்களுடைய மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட மக்களும் அங்கிருக்கின்ற போராளிகளும் தலைவரின் பின்னாலேயே இருக்கின்றார்கள். இந்தத் தேசவிடுதலையின் வெற்றிக்காக இருக்கின்றார்கள்.

இவ்வளவு காலமும் அவர்கள். இந்தத் தேசவிடுதலைக்காக ஆற்றிய அர்ப்பணிப்பு அவர்கள் செய்த தியாகங்கள் என்பது மிகப்பெரியது. இந்தத் தேசவிடுதலைப் போராட்டத்திலே இந்த மட்டக்களப்பு-அம்பாறைமாவட்ட மக்கள் எதிரியால் ஆக்கிரமிக்கப்பட்டு அழிக்கப்பட்ட வரலாறுகள் நிறையவுள்ளன.

எனவே எங்களுடைய தமிழீழ விடுதலைப் போராட்டப் பாதையில் எங்களுடைய மக்கள், தலைவருக்குப் பின்னால் தான் இருப்பார்களே தவிர அதற்கு மாறாகச் செயற்பட மாட்டார்கள். எங்களுக்கு அங்கிருக்கின்ற மக்கள் பலம் இருக்கின்ற நிலையில் மிகவும் இலகுவாக அந்தப்பிரச்சினைக்குத் தீர்வு கொண்டுவருவோம். அதிலுள்ள தந்திரோபாயங்களைப் பற்றி நாங்கள் இந்த இடத்தில் குறிப்பிட விரும்பவில்லை. (சோ)

### தேசத்தை...

தேர்தல் விஞ்ஞாபனத்தில் சமாதானம், ஊழல்களுக்கு எதிரான செயற்பாடுகள், இளைஞர்களை ஊக்கப்படுத்தும் வேலைத் திட்டம், வர்த்தகத்துறையினருக்கான ஊக்குவிப்பு மற்றும் வேலை வாய்ப்புக்கள் என்பன உள்ளடங்கியுள்ளன. (32)

### நோர்வே...

ளப்பட்டு வருகின்ற, மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும், அரசியலிலும் தேர்தலிலும் வடக்கு-கிழக்குப் பெண்களின் பங்களிப்பு தொடர்பாகவும் சமாதான முயற்சிகளின் பின்னர் பெண்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் என்பன குறித்து ஆராயப்பட்டது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.